DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT NO.I, CHIDAMBARAM.

**Present:Selvi**.M. Mayadevi,B.A., L.L.B.,
**Judicial Magistrate No.I., Chidambaram.**

| | |
|---|---|
| Case No. | STC.No.300/2018 |
| Deposition of Witness for Prosecution | PW:1 |
| Cr.No. and Police Station : | Cheque Case |
| Name: | திரு. ஆனந்தன் |
| Father's /Husband Name: | த.பெ. கலியபெருமாள் |
| Village: | சாத்தப்பாடி |
| Age: | |
| **Solemnly Affirmed in accordance with the Provision Act The Oaths Act 1969(Act.44/1969) of the day of 07.02.2026** | |

Accused present.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u> :**

எதிர் மனுதாரர் காந்தியை எப்படி தெரியும் என்றால் அவர் எனது மாமியார் வீட்டிற்கு பக்கத்து தெருவில் வசிப்பவர். எதிரிக்கு எவ்வளவு ரூபாய் பணம் , எந்த தேதியில் கொடுத்தேன் என்றால் ரூ. 3 லட்சம் 13.01.2016 ல் கொடுத்தேன். மேற்படி தொகையை பணமாக கொடுத்தேனா, அல்லது காசோலையாக கொடுத்தேனா என்றால் பணமாக கொடுத்தேன். மேற்படி தொகையை வங்கியில் இருந்து கொடுத்தேனா அல்லது வீட்டில் இருந்து கொடுத்தேனா என்றால் வீட்டில் இருந்து எடுத்து கொடுத்தேன். மேற்படி நான் கொடுத்த பணத்தில் 500 அல்லது 1000 நோட்டுக்களாக கொடுத்தேனா என்றால் ரூ.500 தாள்காக கொடுத்தேன். எத்தனை கட்டுக்கள் கொடுத்தேன். 6 கட்டுக்கள் கொடுத்தேன. பணம் கொடுக்கும் போது வேறு யாரவது இருந்தார்களா என்றால் என்னையும் , எதிரியையும் தவிர வேறு யாரும் இல்லை. மேற்படி பணம் கொடுத்ததற்கு ஜாமினாக ஏதேனும் ஆவணம் பெற்றேனா என்றால் இல்லை. அப்போது வாங்கவில்லை உடனடியாக திருப்பி கொடுத்துவிடுவதாக எதிரி கூறினார். மாமியார் வீட்டிற்கு பக்கத்து தெருவில் வசிப்பவர் என்ற வகையில் ஆவணம் எதுவும் பெறாமல் பணம் கொடுத்தேனா என்றால் அவர் எனது

மாமியாருக்கு உறவினர் என்ற வகையில் தெரியும். மேற்படி தொகையை எதிரி திருப்பி கொடுப்பதாக சொல்லிய நிலையில் எவ்வளவு காலத்தில் கொடுப்பதாக சொன்னார் ஒரு வாரத்தில் கொடுப்பதாக சொன்னார். தொகையை கொடுத்து 2 வருடம் காலம் கழித்து வழக்கு கொடுப்பதற்காக காரணம் என்ன என்றால் எதிரி இடையில் கேட்கும் போது எல்லாம் ஒரு வாரத்தில் கொடுப்பதாக கூறினார். பணம் கொடுப்பதாக சொல்லி பல வாரங்கள் கழிந்த நிலையில் 2 வருடங்கள் கழித்து வழக்கு தொடுத்தது பணம் பறிக்கும் நோக்கத்தில் என்றால் சரியல்ல. எந்த நம்பிக்கையில் 2 வருடங்கள் வழக்கு தொடுக்காமல் இருந்தேன் என்றால் எதிரி வங்கியில் கடன் பெற்று பணத்தை கொடுப்பதாக சொல்லியிருந்தார். வழக்கு காசோலையை எங்கு வைத்து எப்போது வாங்கினேன் என்றால் 23.07.2018 ல் நெய்வேலியில் அப்போது வாடகைக்கு இருந்த வீட்டில் வைத்து வாங்கினேன். மேற்படி தேதியில் எதிரி வங்கியில் தான் கடன் பெற்றுள்ளதாக என்னிடம் சொன்னாரா என்றால் இல்லை. எதிரி தன்னுடைய வங்கி கணக்கில் பணம் இருப்பதாக சொன்னாரா என்றால் ஆம் பணம் இருப்பதாக சொன்னார். 2 வருட காலமாக தொகையை திருப்பி கொடுக்காததால் எதிரி வழக்கு காசோலையை என்னிடம் கொடுத்தார் என்றால் சரியல்ல. என்னிடம் வாங்கி தொகையை திருப்பி கொடுப்பதற்காக காசோலையை கொடுத்தார். வழக்கு காசோலையில் உள்ள கையொப்பம் எதிரியுடையதா என்றால் எதிரியுடையது தான். வழக்கு காசோலையில் உள்ள தேதியும், தொகையும் எதிரிதான் எழுதினாரா என்றால் எதிரி தான் எழுதினார். மேற்படி வழக்கு காசோலை நான் வங்கியில் செலுத்திய போது காசோலை எவ்வாறு திருப்பப்பட்டது என்றால் Account closed என்றுதிருப்பப்பட்டது. எந்த ஆண்டு கணக்கு close செய்யப்பட்டது என்று return memo ல் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை. இந்த விவரங்களை வழக்கறிஞர் மூலமாக எதிரிக்கு அறிவிப்பு அனுப்பியுள்ளேன் என்றால் சரிதான். எதிரி அதற்கு பதில் அறிவிப்பு அனுப்பியுள்ளார் என்றால் சரிதான். என் வழக்கறிஞருக்கு அனுப்பியுள்ளார். எதிரி அளித்த பதில் அறிவிப்பிற்கான ஆட்சேபனைகளை எனது புகாரில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. வழக்கு தாக்கல் செய்த போது எதிரி எங்கு வசிக்கிறார் என்ற விபரம் தெரியுமா என்றால் தெரியும். நான் என் அதிகாரத்தினை பயன்படுத்தி எதிரிக்கு சம்மனை சார்வு செய்யாமல் திருப்பி அனுப்பினேன் என்றால் சரியல்ல. அதை எதிரி வாங்க மறுத்துள்ளார். எனது

மாமியார் பழனியம்மாள் எங்கு வசிக்கிறார் என்றால் நெய்வேலி மந்தாரகுப்பத்தில் வசிக்கிறார். எதிரி மீது எனது மாமியார் புரோநோட் வழக்கு தாக்கல் செய்துள்ள விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. எதிரி அனுப்பிய பதில் அறிவிப்பில் எனது மனைவி சாந்திக்கு ரூ.1லட்சம் பணம் வாங்கி பிறகு செலுத்திவிட்டதாக சொல்லியுள்ளார் என்றால் எதிரி பொய்யாக கூறியுள்ளார். எதிரி என்னிடம் 2015ம் ஆண்டு ரூ. 1லட்சம் கடன் வாங்கி அதனை வட்டியுடன் திருப்பி செலுத்திவிட்டார் என்றாலும் அப்போது பெற்ற கடன் உறுதி சீட்டையும், காசோலையும் நான் எதிரி பலமுறை என்னிடம் கேட்டும் திருப்பி தராமல் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. அவ்வாறு எதுவும் நடக்கவில்லை. மேற்படி காசோலையிலும், கடன் உறுதி சீட்டிலும் எதிரி கையொப்பம் மட்டுமே இட்டுள்ளார் என்றாலும் தேதி, தொகை விவரங்களை அவர் குறிப்பிடவில்லை என்றாலும் சரியல்ல. நான் முன்பு பெற்ற காசோலையை பெற்று தற்போது வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் கடன் உறுதி சீட்டை வைத்து எதிரியின் மீது எனது மாமியாரை வைத்து வழக்கு தொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரியின் வங்கி கணக்கு 2017ம் ஆண்டு முடிக்கப்பட்டது என்றாலும் 2018ம் ஆண்டு எதிரி எனக்கு காசோலை கொடுக்க வேண்டிய அவசியம் இல்லை என்றாலும் சரி யல்ல. வெற்று காசோலையில் நானாக தொகையும், தேதியும் நிரப்பி வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரியின் கணவர் உயிருடன் இல்லை என்பதால் அவருடைய ஓய்வுதிய பலன்களை ஏமாற்றி பெற்றுவிடலாம் என்ற நோக்கத்தில் வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரி கைப்பட வழக்கு காசோலையை நிரப்பவில்லை என்பதால் வழக்கு செல்லாது என்றால் சரியல்ல. நானும், எனது மாமியாரும் எதிரியிடம் இருந்து பணம் பறிக்க வேண்டும் என்ற நோக்கத்தில் பொய்யாக வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் இவ்வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றாலும் சரியல்ல.

Taken down by me in open Court in the presence of the accused read over of the witness and Admitted by him/her to by correct.

(**Selvi**.M. Mayadevi,)
J.M.No.I, Chidambaram